**செ. கு. எண்**: 176 **நாள்**:14.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 14.5.2012

நேபாளத்தில் உள்ள சுற்றுலா தலமான பொக்காராவிலிருந்து திபெத்தியன் எல்லை ஜோம்சம் என்ற இடத்திலுள்ள முக்திநாத் என்ற இந்து புனித யாத்திரை தலத்திற்கு இன்று (14.5.2012) காலை அக்னி ஏர் என்ற தனியார் நிறுவன டார்னியர் விமானம் நேபாளத்தில் ஜோம்சம் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்த போது, எதிர்பாராத விதமாக ஒரு மலை உச்சியின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த விமான விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் சென்னை வடபழனியைச் சேர்ந்த திரு. ஸ்ரீகாந்த் என்பவரின் மனைவி திருமதி லதா மற்றும் கும்பகோணத்தைச் சேர்ந்த பட்டாச்சாரியார் திரு. எல்.எஸ்.சுதர்சனம் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தி எனக்கு மிகுந்தஅதிர்ச்சியை அளித்துள்ளது.

திருமதி லதா மற்றும் திரு. சுதர்சனம் ஆகியோரின் அகால மரணத்தால் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தைத் தொடர்புக் கொண்டு, இறந்தவர்களின் உடல்களை விரைவாக தமிழகத்திற்கு கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படியும் புதுடில்லியில் உள்ள தமிழ் நாடு இல்ல ஆணையருக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் சென்னை வடபழனியை சேர்ந்த ஸ்ரீகாந்த், அவரது மகள்கள் ஸ்ரீவர்த்தினி மற்றும் ஸ்ரீபாதா ஆகியோர் பலத்த காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். இவர்களை மருத்துவமனையில் அனுமதித்து உயரிய சிகிச்சை அளிக்க, உரிய துரித நடவடிக்கைகளை எடுக்க, நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தைச் தொடர்பு கொண்டு அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள புதுடில்லியில் உள்ள தமிழ் நாடு இல்ல ஆணையருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**